# இந்தியாவில் 16 வகையான புற்று நோய்

சென்னை, செப்.6: இந்தியாவில் உள்ள 16 வகையான, பெரும்பாலானோரை பாதிக்கும் பொதுவான புற்று நோய்களைத் தடுப்பது குறித்த மருத்துவ நிபுணர்கள் விவாதிக்கும் இரண்டு நாள் மாநாடு சென்னையில் வெள்ளிக்கிழமை தொடங்கியது.

இந்தோ-பிரிட்டிஷ் ஹெல்த் இன்ஷியேட்டிவ் சார்பில் இந்த மருத்துவ மாநாடு நடைபெறுகிறது. இது தொடர்பாக மியாட் மருத்துவமனையின் இணை நிர்வாக இயக்குநரும் இந்தோ-பிரிட்டிஷ் ஹெல்த் இன்ஷியேட்டிவ் அமைப்பின் நிறுவனருமான டாக்டர் பிருத்வி மோகன்தாஸ் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஏழைகளுக்கு புற்று நோய் வராமல் தடுப்பது என்ற நோக்கத்துடன் இந்த மாநாடு நடத்தப்படுகிறது. இங்கிலாந்தைச் சேர்ந்த 50 புற்று நோய் மருத்துவ நிபுணர்களும் இந்தியாவைச் சேர்ந்த 50 புற்று நோய் மருத்துவ நிபுணர்களும் ஒரே இடத்தில் (சென்னையில்) கூடி நோய்த் தடுப்பு, நோயை முன்கூட்டியே கண்டறிதல், உரிய சிகிச்சை ஆகியவை குறித்து விவாதிக்க உள்ளனர்.

**முன்கூட்டியே...** புற்று நோயைப் பொருத்தவரை முன்கூட்டியே கண்டறிந்தால் எளிதாகக் குணப்படுத்த முடியும். எனவே புற்று நோயை முன்கூட்டியே கண்டறியும் நவீன முறைகள் குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும். குறிப்பாக புகைப் பழக்கம், புகையிலைப் பழக்கம் உள்ளிட்டவற்றால் ஆண்களுக்கு ஏற்படும் வாய்ப் புற்று நோய், கர்ப்பப்பை வாய் புற்று நோய் என பொதுவான 16 வகை புற்று நோய்கள் குறித்து இந்த மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்படும் என்றார் டாக்டர் பிருத்வி மோகன்தாஸ்.

## சென்னையில் நிபுணர்கள் மாநாடு



புற்று நோய் மருத்துவ மாநாடு குறித்து விளக்கும் (இடமிருந்து) டாக்டர்கள் பிருத்வி மோகன்தாஸ், லார்ட் கக்கர், பிரிட்டிஷ் துணைத்தூதர் மைக் நிதாவ்ரினாகிஸ், டாக்டர் ஹோவார் லயன்ஸ்.

முன்னதாக புற்று நோய் மருத்துவ மாநாட்டின் தொடக்க நிகழ்ச்சியில் சென்னையில் உள்ள பிரிட்டிஷ் துணைத் தூதர் மைக் நிதாவ்ரினாகிஸ், லண்டன் பல்கலைக்கழக அறுவை சிகிச்சை நிபுணர் லார்ட் கக்கர், லண்டனைச் சேர்ந்த கர்ப்பப்பை புற்று நோய் சிகிச்சை நிபுணர் ஆர்னி புருஷோத்தம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.